**செய்தி வெளியீடு எண்: 853** **நாள்:11.11.2020**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மனு அளித்த மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு உடனடியாக பணி நியமன ஆணை - பணி நியமன ஆணையினை பெற்ற திருமதி.மாரீஸ்வரி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டார்.**

----------------------------------------------------------------------------------------------------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் 11.11.2020 அன்று தூத்துக்குடி மாவட்டத்திற்கு கொரோனா வைரஸ் நோய் பரவல் தடுப்பு குறித்தும், மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்தும் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மற்றும் புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்தார்கள். முன்னதாக தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.16 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் துறைக்கு மருத்துவ நேரியியல் முடுக்கி கருவியை துவக்கி வைக்கும் நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கார் மூலம் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது மாற்றுத்திறனாளி பெண் ஒருவர் தனது கையில் ஒரு மனுவை வைத்துக்கொண்டு தூத்துக்குடி தெற்கு காவல் நிலையம் அருகில் சாலையோரம் நின்றதைப் பார்த்தவுடன் உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது காரை நிறுத்தி அந்த மாற்றுத்திறனாளி பெண்மணியை அருகிலே அழைத்து, அவரிடம் என்ன வேண்டும் என்று கனிவோடு கேட்டார். அந்த பெண்மணி, ஐயா நான் முத்தையாபுரம் பகுதியை சேர்ந்தவர். எனது பெயர் மாரீஸ்வரி. எனக்கு திருமணமாகிவிட்டது. எனது கணவர் திரு.சின்னத்துரை தினந்தோறும் கூலி வேலைக்கு சென்று வருகிறார். எனக்கு 5 வயதில் சாலினி என்ற பெண் குழந்தையும் உள்ளது. எனது கணவரின் வருமானம் குடும்பத்தினை நடத்துவதற்கு போதுமானதாக இல்லை. நான் மாற்றுத்திறனாளியாக உள்ளேன் என்றும், எனவே எனது குடும்பத்தினை காப்பாற்ற எனக்கு ஏதாவது ஒரு வேலை வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து மனு அளித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாற்றுத்திறனாளியிடம் மனுவைப்பெற்றுக்கொண்டு, அந்த பெண்மணியை உடனடியாக மாவட்ட ஆட்சியர் அலுவலத்திற்கு அழைத்து வருமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அதனடிப்படையில் **மாரீஸ்வரி** மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டார். சுகாதாரத்துறையின் மூலம் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் **வார்டு மேலாளர்** பதவிக்கான பணி நியமன ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த பெண்மணிக்கு வழங்கினார். பணி நியமன ஆணையை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த பணியின் மூலம் மாதம் ரூ.15,000.∴- ஊதியமாக கிடைக்கும் என்றும், எனவே இந்த ஊதியத்தை பெற்றுக்கொண்டு குடும்பத்தை நல்ல முறையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுரை கூறினார்.

பணி நியமன ஆணையை முகமலர்ச்சியோடு பெற்றுக்கொண்ட மாரீஸ்வரி தனது வாழ்க்கைக்கு உதவிடும் வகையில் மனு அளித்தவுடன் எனது கோரிக்கையினை ஏற்று உடனடியாக தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வார்டு மேலாளர் பணியினை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**